SOFA-I-M

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - ஏழு - ________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: ______ | மாணவன்/மாணவி பெயர்: ______ |
| இடம்: ______ | வரிசை எண்: ______ |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. வேயாமாடம் எனப்படுவது ________

    அ) வைக்கோலால் வேயப்பட்டது

    ஆ) சாந்தினால் பூசப்படுவது

    இ) ஓலையால் வேயப்படுவது

2. கடலில் துறை அறியாமல் கலங்குவன ________

    அ) மீன்கள் ஆ) மாடங்கள் இ) மரக்கலங்கள்

3. 'தூண்' என்னும் பொருள் தரும் சொல் ________

    அ) மதலை ஆ) ஏணி இ) சென்னி

4. மக்கள் ________ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

    அ) கடலில் ஆ) கழனியில் இ) வங்கத்தில்

5. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ________

    அ) காற்று ஆ) நாவாய் இ) மணல்

6. தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ________

    அ) கலம் ஆ) வங்கம் இ) ஓடம்

7. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ________

    அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை

8. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ________

    அ) திரிசொல் ஆ) இயற்சொல் இ) வடசொல்

9. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ________

    அ) கன்னடம் ஆ) மலையாளம் இ) சமஸ்கிருதம்

10. உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை ________ எனப்படும்.

    அ) தோணி ஆ) படகு இ) ஓடம்

**ஆ) பொருத்துக.** 4 × 1 = 4

1. எரா - குறுக்கு மரம்
2. பருமல் - அடிமரம்
3. இயற்சொல் - அழுவம்
4. திரிசொல் - சோறு

II. **அ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

1. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
2. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?
3. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.
4. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
5. மண், பொன் என்பவை எவ்வகைச் சொற்கள்?
6. இயற்சொல்லின் வகைகள் யாவை?
7. மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?

**ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

1. கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.
2. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
3. சிறிய நீர்நிலைகளையும், கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.
4. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. பண்டிகை, கேணி எவ்வகைச் சொற்கள்? விளக்குக.

**இ) மனப்பாடப் பாடல்.** 4

1. ‘வானம்’ எனத் தொடங்கும் ‘கலங்கரை விளக்கம்’ பாடலை அடிமாறாமல் எழுதுக.

III. **அ) எவையேனும் ஒன்றனுக்கு தொடர் அமைத்து எழுதுக.** 2

1. நீரோட்டம் 2. ஏற்றுமதி

**ஆ) கீழ்க்காணும் தொடர்களில் காணும் பிழைகளைத் திருத்தி எழுதுக.** 2

1. பேறுந்து நிருத்துமிடத்திள் பல்லிக்கூடம் இருக்கிறது.
2. ஆளமரத்தின் விளுதினைப் பாம்பென்று குறங்கு அஞ்சியது.

**இ) கலைச் சொல் தருக.** 4

1. Light House 2. Harbour 3. Ocean 4. Storm

**ஈ) ‘கை’ என்ற எழுத்தில் முடியும் சொற்களை எழுதுக.** 2

**உ) ஓர் எழுத்து ஒரு மொழியைக் கொண்டு நிறைவு செய்க.** 3

1. முக்கனிகளுள் ஒன்று
2. கதிரவன் மறையும் நேரம்
3. அளவில் பெரிய நகரம்